THE NEW INDIAN EXPRESS

3 OCT 2022

PAGE 3

# Teachers must help bring out individual talents of students, says Union Min

**BAGALAVAN PERIER B** @Puducherry

UNION Cabinet Minister for Education and Skill Development Dharmendra Pradhan on Sunday, inaugurated the 12th International Conference organised by Indian School Psychology Association (InSPA) at Pondicherry University.

In his presidential address, Pradhan said, "The professor instructing students must help them understand that psychology is the basic essence of education. Education and psychology are co-related." He also advised teachers that children must be handled carefully, and they must bring out their individual talents. This kind of conference is also important after post-COVID-19 as we all became introverted during the pandemic, he said requesting the event organiser to make a report, and stressed on the need to have a meeting with all education stakeholders.

> **The professor instructing students must help them understand that psychology is the basic essence of education. Education and psychology are co-related**
>
> Dharmendra Pradhan, Union Minister

He also said Mahatma Gandhi decided to don only two pieces of clothes as he understood that if he has to lead and guide the society, he has to live as a common man. "Similarly, if we want to do anything, we have to understand psychology," contended the Union Minister.

L-G Tamilisai Soundarajan, in her speech, said, "Pradhan implemented the Ujjwala scheme when he was minister for the petroleum department. Now as the Education Minister, he is successfully implementing the New Education Policy." Additional attention is needed for girl children, as they face both mental and physical challenges during their teen years, said the L-G.

Meanwhile, at the event, 'School Psychology in the Indian Context' authored by InSPA president, Professor Panch Ramalingam was released. Awards were presented to people under different categories.

DINAMANI
3 OCT 2022
PAGE 7

# மாணவர்களை மையப்படுத்தியே தேசிய கல்விக் கொள்கை

## மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான்



மாநாட்டை குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்த மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான். உடன் புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், புதுவை பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர்.

**புதுச்சேரி, அக். 2:** மாணவர்களை மையப் படுத்தியே தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளது என்று, மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் 12-ஆவது பள்ளி உளவியல் சர்வதேச ஆய்வு மாநாடு ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. 'சுயசார்பு இந்தியாவை நோக்கியும், பள்ளிகளில் சவால்களை சந்திப்பதும்' என்ற தலைப்பில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகளைச் சேர்ந்த 76 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, மாநாட்டைத் தொடக்கிவைத்தார். பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் எழுதிய 'இந்திய சூழலில் பள்ளி உளவியல்' என்ற ஆங்கில நூலையும், 14 இந்திய மொழிபெயர்ப்பு நூல்களையும் அவர் வெளியிட்டார்.

பின்னர், மத்திய அமைச்சர் பேசியதாவது:

தேசிய கல்விக் கொள்கையை திறம்பட செயல்படுத்தவும், ஒருங்கிணைந்த பள்ளி உளவியல் கட்டமைப்பை உருவாக்கவும் இந்த மாநாடு பரிந்துரைகளை வழங்குவது அவசியம். தேசிய கல்விக் கொள்கை இந்த நூற்றாண்டின் நல்ல குடிமக்களை உருவாக்கும். அவர்கள், இந்திய நெறிமுறைகளுக்கேற்ப மனித குலத்தின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் இருப்பார்கள். கல்வியும், உளவியலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

இந்திய கல்விக் கொள்கை, பள்ளி உளவியலைப் பற்றி பேச உதவுகிறது. மேலும், கற்றலை பயனுள்ள செயல்முறையாக மாற்றுவதற்கான, மாணவர்களின் உள்ளார்ந்த பலம், திறனை அடையாளம் காண துணைபுரிகிறது. மாணவர்களை மையப்படுத்தியே தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளது. அது அவர்களைத் துடிப்பானவர்களாக மாற்றும் என்றார் தர்மேந்திர பிரதான். தொடர்ந்து, மாநாட்டு ஆய்வு நூலை மத்திய அமைச்சர் வெளியிட, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மித் சிங் பெற்றுக்கொண்டார்.

மாநாட்டு தொடக்க விழாவில், புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், செல்வகணபதி எம்.பி., கல்யாணசுந்தரம் எம்எல்ஏ, புதுவை பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINAMALAR

3 OCT 2022

PAGE 4

www.dinamalar.com
புதுச்சேரி
• திங்கள் • அக்டோபர் 3 2022

# பெண் குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்: கவர்னர் தமிழிசை

புதுச்சேரி, அக்.3–

ஆண்குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என கவர்னர் தமிழிசை பேசினார்.

புதுச்சேரி பல்கலையில், 12வது பள்ளி உளவியல் சர்வதேச மாநாடு துவக்க விழா நேற்று நடந்தது. 4ம் தேதி வரை நடக்கும் மாநாட்டை மத்திய கல்வி, திறன் மேம்பாடு தொழில் முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் துவக்கி வைத்து பேசினார்.




புதுச்சேரி பல்கலையில் நடந்த 12வது பள்ளி உளவியல் சர்வதேச மாநாடு துவக்க விழாவில் மத்திய கல்வி, திறன் மேம்பாடு தொழில் முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் மாநாட்டு ஆய்வு கோவை நூலை வெளியிட்டார். அருகில் கவர்னர் தமிழிசை,சபாநாயகர் செல்வம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., துணைவேந்தர் குர்மீத் சிங்,

விழாவில் பேராசிரியர் பாஞ்ராமலிங்கம் எழுதிய இந்திய சூழலில் பள்ளி உளவியல் என்ற ஆங்கில நூலினையும், அதன் 14 இந்திய மொழிகளின் மொழிபெயர்ப்பு நூலும், மாநாட்டு ஆய்வு கோவை நூலும் வெளியிடப்பட்டது.

விழாவில் கவர்னர் தமிழிசை, சபாநாயகர் செல்வம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., துணைவேந்தர் குர்மீத் சிங், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், கட்டுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் கவர்னர் தமிழிசை பேசியதாவது:

குழந்தைகளின் மனநிலையை பாதுகாக்க வேண்டியது முக்கியம். குழந்தைகளை கண்ணாடி டம்ளரை கையாள்வது போல கையாள வேண்டும். அவர்களுடைய இயல்பான மனநிலையை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நம் குழந்தைகளை வற்புறுத்துகிறோம்.

குழந்தைகளுக்குள் இருக்கும் திறன்களை நாம் அடையாளம் காண வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு திறமையோடு பிறக்கின்றனர். அதை வெளிக்கொண்டு வர வேண்டும். கல்வித்துறையில் ஆராய்ச்சி செய்வதை போல குழந்தைகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால் வளரிளம் பருவத்தில் அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சில சவால்களை சந்திக்கிறார்கள். இதுபோன்ற விஷயங்களை கவனத்தில் கொண்டால் நம்முடைய இளம் சமுதாயத்தினர் திறமைகளோடு வளர முடியும். பிரதமர் கூறியதைப் போல வகுப்பறையில் இருந்து உலக அரங்கிற்கு நம்முடைய குழந்தைகள் வந்து சேருவார்கள்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

முன்னதாக, மத்திய கல்வி, திறன் மேம்பாடு தொழில் முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதானை சந்தித்த கவர்னர் தமிழிசை புதுச்சேரியில் உள்ள அரசு பள்ளிகளை மத்திய சி.பி.எஸ்.இ., பாடதிட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்க வேண்டி மனு அளித்தார்.

DINAMALAR

3 OCT 2022

PAGE 4

# குழந்தைகள் தேவையை அறிந்து கற்பிக்க வேண்டும்

## மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சு

**புதுச்சேரி, அக்.3–**

குழந்தைகள் கற்க விரும்புவதை தான் தேசிய கல்விக் கொள்கையில் முன்னேடுக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசினார்.

புதுச்சேரி பல்கலையில் நேற்று துவங்கிய 12வது பள்ளி உளவியல் சர்வ தேச மாநாட்டில், மத்திய கல்வி, திறன் மேம்பாடு தொழில் முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி கொரோனா பெருந்தொற்று நேரத்தில், தொலைநோக்கு பார்வையுடன் பல முடிவுகளை எடுத்தார். அதனை திடமாக செயல்படுத்தியதால், கொரோனா தடுப்பூசியில் இன்று தன்னிறைவு பெற்றுள்ளோம். மேலும், 150 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உலகை திரும்பி பார்க்க வைத்துள்ளோம்.

கல்வியில் குழந்தைகள் தேவையை அறிந்து கற்பிக்க வேண்டும். அது தான் முக்கியம். அதற்காகத்தான் தேசிய கல்வி கொள்கையில் பல்வேறு நெகிழ்வு தன்மை உருவாக்கி இருகின்றனர்.

குழந்தைகள் எதை கற்க விரும்புகிறார்களோஅதனை தான் தேசிய கல்வி கொள்கையில் நாம் முன்னேடுத்துள்ளோம். குழந்தைகளின் எதிர்காலம் கருதி மிகுந்த பயன் தர கூடிய கல்வியை திட்டமிடுகிறோம். ஆனால் அதன் பலன் ஆசிரியர்கள் கைகளில் தான் உள்ளது. அதனை ஆசிரியர்கள் சரியாக செயல்படுத்த வேண்டும். பல நாடுகளை சேர்ந்தவர்கள் பள்ளி உளவியல் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

இங்கு விவாதிக்கின்ற கருத்துகளை பரிந்துரைகளாக மத்திய அரசுக்கு கொடுக்க வேண்டும். அதனை பரிசீலித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

DINA THANTHI

PAGE 2

3 OCT 2022

PAGE 2




உளவியல் பன்னாட்டு ஆய்வு மாநாட்டை மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், சபாநாயகர் செல்வம், பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் ஆகியோர் உள்ளனர்.

# புதிய கல்விக்கொள்கை சிறந்த குடிமக்களை உருவாக்கும்

## மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் சொல்கிறார்

புதுச்சேரி, அக்.3-

புதிய கல்விக்கொள்கை சிறந்த குடிமக்களை உருவாக்கும் என்று மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் கூறினார்.

### பன்னாட்டு ஆய்வு மாநாடு

புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் "சுயசார்பு இந்தியாவை நோக்கியும்- பள்ளிகளில் சவால்களை சந்திப்பதும்" என்ற தலைப்பில் 12-வது பள்ளி உளவியல் பன்னாட்டு ஆய்வு மாநாடு நடந்தது.

இதன் தொடக்க விழாவில் மத்திய கல்வி திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மந்திரி தர்மேந்திர பிரதான் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

### புதிய கல்விக்கொள்கை

புதிய கல்விக்கொள்கையை திறம்பட செயல்படுத்தவும், ஒருங்கிணைந்த பள்ளி உளவியல் கட்டமைப்பை உருவாக்கவும் இந்த மாநாட்டில் பரிந்துரைகளை தருவது அவசிய குடிமக்களை உருவாக்கும்.

கல்வியும் உளவியலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. கற்றல் திறமையை வாழ்நாள் முழுவதும் செயல்படுத்த ஒவ்வொரு கற்பவரின் உளவியலையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். இந்திய கல்விக்கொள்கை பள்ளி மாணவர்களின் உளவியலை பற்றி பேச உதவுகிறது. கற்றலை ஒரு பயனுள்ள செயல்முறையாக மாற்றுவதற்கான மாணவர்களின் உள்ளார்ந்த பலம் மற்றும் திறனை அடையாளம் காண உதவுகிறது.

### தார்மீக நெறிமுறை

புதிய கல்விக்கொள்கையில் அடிப்படை கருத்துகளில் கற்போர் ஒவ்வொருவரும் சேவை, அகிம்சை, உண்மை, தூய்மை, பணி, அமைதி போன்ற தார்மீக நெறிமுறைகளையும் பெற முடியும்.

புதிய கல்விக்கொள்கையானது மாணவர்களை மையப்படுத்தியே அமைந்துள்ளது. அரவிந்தரின் ஒருங்கிணைந்த கல்வி, சுவாமி விவேகானந்த

பேசினார்.

### கவர்னர்

கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் பேசியதாவது:-

ஒரு தாயாக, ஒரு மருத்துவராக குழந்தைகளின் மனநிலையை பாதுகாக்க வேண்டியது முக்கியம் என்று கருதுகிறேன். குழந்தைகளை கண்ணாடி டம்ளரை கையாளுவது போல கையாள வேண்டும். அவர்களுடைய இயல்பான மனநிலையை புரிந்துகொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்குள் இருக்கும் திறன்களை நாம் அடையாளம் காண வேண்டும். இதுபோன்ற விசயங்களை கவனத்தில் கொண்டால் நம்முடைய இளம் சமுதாயத்தினர் திறமைகளோடு வளர முடியும்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

### சபாநாயகர்

மாநாட்டில் சபாநாயகர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., புதுச்சேரி பல்க

THE HINDU TAMIL

3 OCT 2022

PAGE 5

# புதிய கல்விக் கொள்கை இந்நூற்றாண்டின் உலகளாவிய குடிமக்களை உருவாக்கும்

● மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கருத்து

■ புதுச்சேரி

புதிய கல்விக்கொள்கை இந்நூற்றாண்டின் உலகளாவிய குடிமக்களை உருவாக்கும் என்று மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரகான் தெரிவித்தார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் 12-வது பள்ளி உளவியல் பன்னாட்டு ஆய்வு மாநாடு நேற்று நடந்தது. 'சுயசார்ப்பு இந்தியாவை நோக்கியும் - பள்ளிகளில் சவால்களை சந்திப்பதும்' என்ற தலைப்பில் நடந்த மாநாட்டில் அமெரிக்கா, கனடா, உட்பட 13 நாடுகளைச் சேர்ந்த 76 பிரதிநிதிகள் பங்கேற்றனர். பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் எழுதிய இந்திய சூழலில் பள்ளி உளவியல் என்ற ஆங்கில நூலையும், 14 இந்திய மொழிப் பெயர்ப்பும் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்வில் மத்திய கல்வி திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியதாவது:




▲ புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 12-வது பள்ளி உளவியல் பன்னாட்டு ஆய்வு மாநாட்டில் மத்திய கல்வி திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசினார்.

புதிய கல்விக்கொள்கையை திறம்பட செயல்படுத்தவும், ஒருங்கிணைந்த பள்ளி உளவியல் கட்டமைப்பை உருவாக்காகவும் இம்மாநாடு பரிந்துரைகளை தருவது அவசியம். புதிய கல்விக்கொள்கை இந்நூற்றாண்டின் உலகளாவிய குடிமக்களை உருவாக்கும். அவர்கள் இந்திய நெறிமுறைகளுக்கு ஏற்ப மனித குலத்தின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் இருப்பார்கள். கற்றல் மற்றும் திறமையை வாழ்நாள் முழுவதும் செயல்படுத்த ஒவ்வொரு கற்பவரின் உளவியலையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சீர்குலைக்கும் மாற்றத்தின் இந்த சகாப்தத்தில் புதிய கல்வி மாதிரிகளையும், மறு-திறன் மற்றும் திறமையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய கல்விக்கொள்கையானது மாணவர்களை மையப்படுத்தியே அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துணைநிலை ஆளுநர் தமிழிசை பங்கேற்று பேசுகையில், "விவேகானந்தர் கூறியதுபோல ஒவ்வொருவரும் ஒரு திறமையோடு பிறக்கிறார்கள். அதை வெளிக்கொண்டு வர வேண்டும். ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால் வளரிளம் பருவத்தில் அவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சில சவால்களை சந்திக்கிறார்கள்.

இதுபோன்ற விஷயங்களை கவனத்தில் கொண்டால் நம்முடைய இளம் சமுதாயத்தினர் திறமைகளோடு வளர முடியும்" என்றார். புதுச்சேரியில் உள்ள அரசுப் பள்ளிகளை மத்திய அரசு பாடத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அனுமதி வழங்கக்கோரி, மத்திய அமைச்சரிடம் துணைநிலை ஆளுநர் மனு வழங்கினார். ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் செயல்பட்டாலும் இதர வகுப்புகளில் நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் சூழலில் இம்மனு அளிக்கப்பட்டுள்ளது.